<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், திருச்செங்கோடு</u>

<u>வாக்குமூல படிவம்</u>

**<u>OS.No.44/2019</u>**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திரு. செல்வகுமார் | பி.வா.சா | : 1 |
| த/பெயர் | : பச்சமுத்து | தேதி | : 06.07.2026 |

பி.வா.சாட்சி 1–ன் வாக்குமூலம் 1875ம் ஆண்டில் 10 வது பிரிவின் கீழ் விசாரிக்கப்பட்டு திரு.கோ.ஜெகதீசன், இரண்டாம் நிலை இருக்கை எழுத்தர் என்பவரால் ஆணையிட்டுபிரமாணம் வாங்கப்பட்டது.

**<u>வாதி தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி:–</u>**

1. என்னுடைய தந்தை 1966 ஆம் வருடம் Higher Grade டீச்சராக பணியில் சேர்ந்தார் என்றால், சரிதான். என்னுடைய தந்தை Higher Grade டீச்சராகவே இருந்து பதவி உயர்வு பெறாமல் 2002 ஆம் வருடம் பணி ஓய்வு பெற்றார் என்றால், சரிதான். என்னுடைய தந்தை பணி ஓய்வு பெறும்பொழுது அவருடைய மாத சம்பளம் ரூ.10,000/– என்றால், அது எனக்கு சரியாக தெரியாது. என்னுடைய தந்தை பணியில் சேர்ந்தபொழுது அவருடைய மாத சம்பளம் ரூ. 65/– என்றால், அதுவும் எனக்கு தெரியாது. என்னுடைய தந்தை மாத பென்ஷன் ஆக ரூ.3000/– பெற்று வருகிறார் என்றால், சரியல்ல. என்னுடைய தந்தை பணியில் சேர்ந்ததிலிருந்து பணி ஓய்வு பெறும் வரை மாதம் எவ்வளவு சம்பளம் பெற்றார் என்று சம்பள பட்டியலை வாங்கி தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா? என்றால், தயாராய் உள்ளேன்.

2. என்னுடைய தந்தையினுடைய சர்வீஸ் ரிஜிஸ்டரையும் என்னால் தாக்கல் செய்ய இயலும் என்றால், என்னுடைய தந்தை பணி ஓய்வு பெற்று விட்டதால் சர்வீஸ் சென்டர் ரிஜிஸ்டரை கொடுப்பார்களா? இல்லையா? என்று எனக்கு தெரியாது. என்னுடைய தந்தைக்கு தெரியும் என்றாலும், அவரை வழக்கில் சாட்சியாக விசாரிக்க தயாராக உள்ளேன் என்றால், என்னுடைய தந்தையை கேட்டு கூறுகிறேன். என்னுடைய தந்தையின் பணி ஓய்வு தொகை ரூபாய் 3 லட்சத்து 25 ஆயிரம் என்றால், சரியல்ல, நான்கு லட்சத்திற்கும் அதிகமாக பெற்றார். 4 லட்சத்திலிருந்து 6 லட்சத்திற்கு உள்ளாக பெற்றார், ஆனால் குறிப்பாக எவ்வளவு பெற்றார் என்று எனக்கு சரியாக தெரியாது. எவ்வளவு பெற்றார் என்று என்னுடைய தந்தைக்கு தெரியும் என்றால், சரிதான்.

3. திருமணத்திற்கு பின்னர் என்னுடைய தாயார் Second Grade டீச்சராக 27.10.1973 இல் பணியில் சேர்ந்தார் என்றால், சரிதான். என்னுடைய தாயார் Half Million Scheme என்ற திட்டத்தின் மூலமாக பணியில் சேர்ந்தார் என்றால், சரிதான், (சாட்சி மீண்டும் தன்னுடைய தந்தையின் முயற்சியால் தாயார் பணியில் சேர்ந்ததாக கூறுகிறார்). என்னுடைய தந்தையின் முயற்சியால் என்னுடைய தாயார் பணியில் சேர்ந்தார் என்று சாட்சியம் அளிப்பது பொய் என்றால், சரியல்ல. என்னுடைய தாயார் பணியில் சேர்ந்தபொழுது அவருடைய சம்பளம் ரூ.365/– என்றால், அது எனக்கு தெரியாது.

4. 29.09.2000 தேதியன்று தாவா சொத்தினை எனது தாயார் கிரயம் பெற்றார் என்றால், வா.சா.ஆ1 கிரைய பத்திரம் என்னுடைய தாயார் பெயரில் உள்ளது, ஆனால் என்னுடைய தந்தை தான் என்னுடைய அம்மா பெயரில் கிரயம் வாங்கினார். 2000ம் வருடத்தில் என்னுடைய தாயார் மேற்படி சொத்தினை கிரயம் பெற்றபொழுது என் தாயாருடைய மாத சம்பளம் ரூ.15,000/– என்றால், சரிதான். என்னுடைய தாயார் 2008ஆம் வருடம் ஓய்வு பெற்றபொழுது அவருடைய மாத சம்பளம் பிடித்த போக ரூ.19,072/– என்றால், சரிதான். வா.சா.ஆ1 கிரைய ஆவணத்தின் மொத்த கிரைய தொகைரூ.79,000/–ஆயிரம்என்றால்,சரிதான்.

**(வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)**

G RUBANA Digitally signed by G RUBANA Date: 2026.07.06 17:59:49 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருச்செங்கோடு.